தினமணி

# காவிரி பாசனக் கட்டமைப்புத் திட்டம் விவசாயிகளின் ஆலோசனைகளையும் பெற வேண்டும்

First Published : 17 May 2012 03:26:12 AM IST

திருச்சி : தமிழக முதல்வர் அறிவித்துள்ள காவிரி டெல்டா பாசனக் கட்டமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் விவசாயிகளின் ஆலோசனைகளையும் பெற்று விரிவாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காவிரி டெல்டா பாசன கட்டமைப்புக்கு ரூ.1,560 கோடி செலவில் நான்கு அம்சத் திட்டம் செயல்படுத்தப்படுமென முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் திங்கள்கிழமை அறிவித்தார். வெள்ள நீரைச் சேமிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை செறிவூட்டவும் இந்தத் திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படுமென முதல்வர் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதுகாக்க முதல்வர் அறிவித்துள்ள இந்தத் திட்டத்தை டெல்டா விவசாயிகள் வரவேற்றுள்ளனர். டெல்டா விவசாயிகளுக்கு பயனளிக்கக் கூடிய வகையில், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது என்ற நோக்கில் சில ஆலோசனைகளையும் முன்வைக்கின்றனர் விவசாயிகள்.

இதுகுறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாயி சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் ஆறுபாதி கல்யாணம் கூறியது:

வெள்ள நீரை ஆற்றிலேயே சேமிக்க இயலாது என்பதால், ஒவ்வொரு மதகுக்கு (ரெகுலேட்டர்) முன்பாக நூறு முதல் இருநூறு ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அதில் பெரிய அளவில் ஏரிகளை வெட்டி, அதில் இந்த நீரைச் சேமிக்கலாம்.

இந்தத் திட்டப் பணிகளை அரசு தனித்தனியாக ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைத்தால், அது அரசியல் தலையீட்டுக்குள்ளாகி முதல்வரின் விருப்பத்தையோ, விவசாயிகளின் தேவையையோ எந்த வகையிலும் நிறைவு செய்யாது.

டெல்டா மாவட்டங்களில் கடந்த காலங்களில் ஆளுங்கட்சியினரே ஒப்பந்தம் எடுத்து ஆறுகளில் தூர்வாரும் பணிகளை பெயரளவுக்குச் செய்தது போன்று இந்தத் திட்டத்தின் உயர்ந்த நோக்கமும் பாழாகி விடும். எனவே, உலகத் தரம் வாய்ந்த, தரக் கட்டுப்பாட்டுடன் செயல்படும் பெரிய நிறுவனங்களிடம் இந்த பணி ஒப்பந்தத்தை அளிக்க வேண்டும் அல்லது பொதுப் பணித் துறையே நேரடியாகச் செய்ய வேண்டும்.

இந்தத் திட்டத்தை தொடங்கும் முன்பாக பொதுப் பணித் துறைச் செயலர் தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட ஆட்சியர்கள், பொதுப் பணித் துறை பொறியாளர்கள் உள்ளிட்டோரைக்

கொண்ட ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டி, இந்த பணியைச் செம்மையாகத் திட்டமிட வேண்டும்.

விவசாயிகளின் கருத்துகளையும் கேட்டறிய வேண்டும். அரசியல் சார்பற்ற விவசாயிகளை உள்ளடக்கிய ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுக்களையும் அமைக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தால் டெல்டா கடைமடை மாவட்டங்களில் விவசாய நிலங்களும், நீர்மட்டமும் பாதுகாக்கப்படும் என்ற நிலையில், அதற்கான பணிகள் முழுமையாகவும், தரமானதாகவும், விவசாயிகளுக்கு பயனளிக்கக் கூடிய வகையிலும் செய்ய வேண்டியது அவசியமானது என்றார்.

**முட்டை விலை**

First Published : 17 May 2012 07:33:07 AM IST

நாமக்கல், மே.16: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.75, சென்னையில்

ரூ. 2.83. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.71, முட்டைக் கோழி கிலோ ரூ.37.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**இயற்கை உரங்களுக்கு முக்கியத்துவம்...ரசாயன உர மானியத்தை குறைக்க திட்டம்**

மே 17,2012,00:06

புதுடில்லி: மத்திய அரசு, இயற்கை உரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்துள்ளது. அதேசமயம், ரசாயன உரத்திற்கான மானியத்தை குறைக்க திட்டமிட்டுள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார், பார்லிமென்டில் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:ரசாயன உரங்களை தொடர்ந்து பயன்படுத்துவதால், மண் வளம் குறைந்து போவதுடன், வேளாண் உற்பத்தியும் குறையத் துவங்கியுள்ளது. எனவே, ரசாயன உரத்திற்கு அளிக்கப்படும் மானியத்தை குறைக்கவும், அதேசமயம் இயற்கை ரசாயன உர உற்பத்தியை மேம்படுத்துவதற்கான, நடவடிக்கை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.நாட்டின் முதல் பசுமை புரட்சியின் போது, ரசாயன உர பயன்பாட்டால், வேளாண் உற்பத்தி, 50 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்தது. ஆனால், ரசாயன உரங்களை தொடர்ந்து பயன்படுத்துவதால், மண் வளம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.குறிப்பாக, பஞ்சாப், ஹரியானா, உத்தர பிரதேசத்தின் மேற்கு பகுதிகளில் அதிகளவு ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டதால், தற்போது, அப்பகுதிகளில், நெல் சாகுபடி மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகி விட்டது.

இதை கருத்தில் கொண்டு, மத்திய அரசு, இப்பகுதிகளில் பருப்பு வகைகள், கோதுமை, எண்ணெய் வித்துக்கள் போன்ற தானியங்களை அதிகளவில், பயிரிடும் வகையில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்து வருகிறது.நாட்டின் கிழக்கு பகுதிகளில் உள்ள பல மாநிலங்களில், நெல் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.மத்திய அரசு, மண் வளத்தை மேம்படுத்தும் வகையில், பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

நுண்ணூட்ட சத்து, உயிரி உரங்கள், இயற்கை உரங்கள், பசுந்தாள் உரங்கள் போன்றவற்றை மிக அதிகளவில் உற்பத்தி செய்யும் வகையில், திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.மேலும், பழங்கள் மற்றும் காய்கறி கழிவுகள் வாயிலாக, இயற்கை உர வகைகளை உற்பத்தி செய்வதற்காக, பெரிய அளவில் தொழில் பிரிவுகளை அமைக்க நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.இதன் வாயிலாக, எதிர்காலத்தில், இயற்கை உர வகைகள் உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், மண் வளம், மேலும் மேம்படுவதுடன் இயற்கை சாகுபடியின் மூலம் அதிகளவில், வேளாண் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**மாம்பழம் கிலோ ரூ.20**

மே 16,2012,11:31



மதுரை : மதுரையில் மாம்பழம் சீசன் களைகட்டும் நிலையில், கிலோ ரூ.20 முதல் ரூ.50 வரை விற்கப்படுகிறது.யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது : நேற்று ஒரு கிலோ சப்பட்டை மாம்பழம் ரூ.40, காதர் ரூ.40, அல்போன்சா ரூ.40, காலாபாடி ரூ.40, இமாம்பசந்த் ரூ.20, பாலாமணி ரூ.40, மல்கோவா ரூ.50, காசாலட்டு ரூ.40க்கு விற்கப்பட்டது. பன்னீர் திராட்சை ரூ.60, தில்குஷ் திராட்சை ரூ.60, ஆஸி., திராட்சை ரூ.280, சப்போட்டா ரூ.25, பப்பாளி ரூ.15, அன்னாசி ரூ.30, பிளம்ஸ் ரூ.100, வாஷிங்டன் ஆப்பிள் ரூ.160, சீனா ஆப்பிள் ரூ.130, நெல்லிக்காய் ரூ.40க்கு விற்கப்பட்டது, என்றார்

**உழவர் விழா**

பதிவு செய்த நாள் : மே 17,2012,00:30 IST

கருத்தை பதிவு செய்ய

கன்னிவாடி:ஆடலூரில், உழவர் பெருவிழா ஊராட்சி தலைவர் பிரியா தலைமையில் நடந்தது. ஒன்றிய கவுன்சிலர் சங்கரமூர்த்தி முன்னிலை வகித்தார்.

துணைத்தலைவர் மேகநாதன் வரவேற்றார். அரசு திட்டங்கள், மானியம், சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்துப் பேசினர். வேளாண்மை, வேளாண்பொறியியல், தோட்டக்கலை, பட்டு, மீன்வளர்ப்பு துறைகளின் திட்டங்கள் குறித்து அதிகாரிகள் விளக்கினர்.

**விவசாயிகளுக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : மே 17,2012,00:15 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி:பயறு வகை சாகுபடிக்கு இலைவழி உரமிட வேண்டும், என விவசாயத்துறை அறிவுறுத்தி உள்ளது.கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம், குச்சனூர், கூடலூர் பகுதிகளில் நெல் தரிசில் பாசிப்பயறு, உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது வளர்ச்சி பருவத்தில் உள்ளதால், அதிக மகசூல் பெறுவதற்கு 2 சதவீத டி.ஏ.பி.,கரைசலை இலைவழி உரமாக தெளிக்க வேண்டும். 15 நாள் இடைவெளியில் இரண்டு முறை டி.ஏ.பி., கரைசல் தெளிக்க வேண்டும், என விவசாயத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

## உரங்கள் இருப்பு நிலவரம் விவசாயத்துறை தகவல்

பதிவு செய்த நாள் : மே 17,2012,00:08 IST


கருத்தை பதிவு செய்ய

தேனி: மாவட்டத்தில் போதுமான அளவில் உரங்கள் இருப்பு உள்ளதாக விவசாயத்துறை தெரிவித்துள் ளது. விவசாயத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

மாவட்டத்தில் மானாவாரி உழவு, விதைப்பு பணிகள் நடந்து வருகின்றன. அனைத்து தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும் பொட்டாஷ் 1,500 டன், யூரியா 500 ன், 20க்கு 20 காம்ப்ளக்ஸ் 1,600 டன் உரங்கள் இருப்பு உள்ளது. வெளி மார்க்கெட்டிலும் உரங்கள் தேவைக்கு ஏற்ப உள்ளன. விவசாயிகள் உரத்திற்கு கூடுதல் விலைதர தேவையில்லை, என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

# வேளாண்மை செய்திகள்



ஈமு கோழி பண்ணையை படத்தில் காணலாம்.

# வளர்ந்து வரும் ஈமு கோழி வளர்ப்பு...

ஈமு கோழி ஆஸ்திரேலியா நாட்டை பிறப்பிடமாக கொண்டது. ராடேட் என்கிற உயிரியல் குடும்பத்தை சேர்ந்தது. 1996–ம் ஆண்டு ஈமு கோழிகள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஈமு கோழி இறைச்சி, கொழுப்பு, தோல் மற்றும் இறகுகளுக்காக வளர்க்கப்பட்டு வருகின்றன. தற்போது முக்கியமாக ஈமு கோழிகள் இறைச்சி மற்றும் எண்ணை உற்பத்தியை முன்னிலைப்படுத்தியே வளர்க்கப்பட்டு வருகின்றன. இதனால் இந்த தொழில் வளர்ந்து வரும் தொழிலாக மாறி வருகிறது.

## ஈமு இறைச்சி

ஈமு கோழியின் இறைச்சி அறிவியல் பூர்வமாக கொழுப்பு குறைந்த சிவப்பு இறைச்சி என்று அழைக்கப்படுகிறது. கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சியில் உள்ள கொழுப்பினை ஒப்பிடும் போது ஈமு இறைச்சியில் குறைந்த அளவே கொழுப்பு உள்ளது. சிவப்பு இறைச்சியை விரும்புபவர்களுக்கு ஈமு கோழி இறைச்சியானது மிகவும் நல்ல மாற்று இறைச்சியாகும். ஈமு இறைச்சியில் மற்ற இறைச்சிகளைவிட குறைந்த அளவில் கொழுப்பு இருப்பதால் இதயத்துக்கு உகந்த இறைச்சியாகும்.

## ஊட்டச்சத்து

ஈமு கோழி மிகவும் ஊட்டச்சத்து உள்ள இறைச்சியை கொடுக்கிறது. அதாவது சமைக்கப்பட்ட 100 கிராம் ஈமு இறைச்சியில் 5.09 மில்லி கிராம் துத்தநாகம் மற்றும் 7.27 மில்லிகிராம் இரும்புச் சத்தும் உள்ளது. இவை இரண்டும் மனிதர்களுக்கு மிக முக்கியமான ஊட்டச்சத்துகளாகும். துத்தநாகம் என்ற ஊட்டச்சத்து பிராஸ்டேட் சுரப்பிக்கும், இரும்புச்சத்தானது அனிமியா வராமல் தடுப்பதிலும் மிக முக்கியப்பங்கு வகிக்கும் ஊட்டச்சத்துகளாக விளங்குகின்றன.

பிற இறைச்சிகளில் இருப்பதை விட ஈமு கோழி இறைச்சியில் மிக அதிக அளவில் ஊட்டச்சத்துகள் உள்ளன. குறிப்பாக ஈமு கோழி இறைச்சியில் புரதம் 21.2 சதவீதம் முதல் 23.3 சதவீதம் வரை உள்ளது. இதுவே மாட்டு இறைச்சியில் 18 சதவீதம் முதல் 21 சதவீதம் வரையும், ஆட்டிறைச்சியில் 19.5 சதவீதமும் உள்ளது.

## கொழுப்பு

கொழுப்பு என்பது ஈமு இறைச்சியில் மிகக்குறைவாகவே உள்ளது. ஈமு இறைச்சியில் 1.7 சதவீதம் முதல் 4.5 சதவீதம் வரை மட்டுமே கொழுப்பு உள்ளது. இதுவே மாட்டு இறைச்சியில் 2 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையும், பன்றி இறைச்சியில் 25 சதவீதம் வரையும், கோழி இறைச்சியில் 13 சதவீதம் வரையும், ஆட்டிறைச்சியில் 7 சதவீதம் வரையும் கொழுப்பு உள்ளது. இதுபோல் கலோரியும் மிகக்குறைவாகவே உள்ளது.

உடலுக்கு தேவையான சோடியம், பொட்டாசியம், கால்சியம், பாஸ்பரஸ் மக்னீசியம், இரும்புச்சத்து, கோலைன், சாம்பல் ஆகிய சத்துகள் முழுமையாக ஈமு கோழியின் மூலம் கிடைக்கிறது. கொலஸ்ட்ரால் மற்ற இறைச்சிகளை விட மிகவும் குறைவாக உள்ளது.

## ஈமு எண்ணை

ஈமு எண்ணையானது ஈமு கோழியின் பின்புறம் மற்றும் முதுகுப்புறத்தில் உள்ள கொழுப்பில் இருந்து எடுக்கப்படுகிறது. ஈமு எண்ணையில் நிறைவுறா கொழுப்பு அமிலங்கள் உள்ளன. ஈமு எண்ணையின் கொழுப்பு அமிலமானது மனித தோல் சுரப்பிகளில் இருந்து வரும் சுரப்பு நீரைப்போன்றே இருக்கும். இது தோலின் தன்மையையும், ஈரப்பதத்தையும் ஊடுருவும் திறனையும் கொண்டது. எனவே இவை தோல் பாதுகாப்பு பொருட்கள் மற்றும் மூட்டுவலி நோய் நீக்கி எண்ணை ஆகியவைகள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

ஈமு எண்ணை மனித தோலினை எளிதில் ஊடுருவும் திறன் கொண்டது. எனவே இக்காயம் பட்ட தழும்பு, காயம் மற்றும் மூட்டுவலி ஆகியவற்றை குணப்படுத்தும் மருந்துகள் தயாரிக்கவும், சிறந்த அலர்ஜி நீக்கியாகவும் பயன்படுகிறது. இதற்கு அறிவியல் சான்றுகளும் உள்ளன.

## எண்ணையின் பண்புகள்

ஈமு எண்ணை பால்போன்ற திரவமாக இருக்கும். கிருமிகளை அழிக்கும் தன்மை அதிகம் கொண்டது. குறைவான தோல் அரிப்புத்தன்மை கொண்டது. மருந்துகளை வெளியே தடுத்து நிறுத்தி விடாமல் தோலுக்குள் ஊடுருவி எடுத்துச்செல்லும் தன்மை கொண்டது. நல்ல ஈரப்பத தன்மை கொண்டது. வலிகளை குணப்படுத்தும் ஆற்றல் அதிகம் கொண்டது. எனவே விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி ஏற்படும் மூட்டு சிராய்ப்பு, தசை நார்களுக்கு, தசைப்பிடிப்பு ஆகியவற்றை எளிதில் குணமாக்கும்.

## செயல்பாடு

ஈமு எண்ணையில் பலபடித்தான நிறைவுறா கொழுப்பு அமிலங்கள், முக்கியமான அல்பா லினோலெனிக் (ஒமேகா–3) மற்றும் லினோலியிக் (ஒமேகா–6) ஆகியவை உள்ளன. இந்த ஒமேகா கொழுப்பு அமிலமானது, ரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரால் அளவினைக்குறைத்து இருதய நாளங்களில் ஏற்படும் நோய்களை தடுக்கிறது. மேலும் ஒமேகா கொழுப்பு அமிலத்தை மனித உடலினால் உற்பத்தி செய்ய முடியாது என்பதால் ஈமு கோழி இறைச்சியை உணவுப்பொருளாக சாப்பிடும் போது ஒமேகா கொழுப்பின் பயனை பெறலாம்.

தகவல்:– பா. டென்சிங் ஞானராஜ், பிஎச்.டி.

பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை, சென்னை

# தொட்டிகளில் சாகுபடியாகும் 'குத்து மிளகு'



மிளகு கொடி இனத்தை சேர்ந்த பல்லாண்டு பயிர் குத்து மிளகு. தண்டுகளை 3 முதல் 5 கணுக்கள் கொண்டதாக சேகரித்து மண் சட்டியில் வளர்ப்பதே குத்து மிளகு செடி.

## குத்து மிளகு சாகுபடி

குத்து மிளகு வளர்ப்புக்கு நன்கு முதிர்ந்த நோயற்ற மிளகு தோட்டங்களில் இருந்து ஒரு வயது நிரம்பிய கிளைகளை சேகரித்து, 3–5 கணுக்கள் கொண்ட கரணைகளாக கத்தியை கொண்டு வெட்டி எடுக்க வேண்டும். பின்னர் பயிர் ஊக்கியான ஐ.பி.ஏ. 1000 பி.பி.எம். கரைசலில் கரணைகளின் அடிப்பகுதிகளை ½ நிமிடம் ஊறவைத்து, நாற்றுகள் போல் நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும்.

இந்த கரணைகளின் வளர்ச்சி திறன் 20 சதவீதம் ஆகும். வளர்ச்சி திறன் காண பதற்கு 45–60 நாட்கள் ஆகும். நாற்றங்காலில் கன்றுகள் நன்றாக வேர்பிடிக்க நன்கு தீட்டிய கத்தியின் உதவியுடன் நுனி இலைகளை தவிர மற்றவற்றை களைந்து விட வேண்டும்.

## பராமரிப்பு முறைகள்

அடிப்பகுதியில் சாய்வாக நறுக்கி கெராடிக்ஸ்–டீ என்ற வேர் வளர்ச்சி ஊக்கியில் அடிப்பகுதிகளை நனைத்து, [illegible] தேங்காய் நார் நிரப்பிய பாலிதீன் பைகளில் 3 முதல் 5 கரணைகள் விதம் நட்டு, பைகளின் மேல்பகுதியை மூடிய நிலையில் கட்டி விட வேண்டும். இந்த சூழ்நிலையில் 45 நாட்களில் வளர்ச்சி காணப்படும்.

இந்த கட்டத்தில் கரணைகளை மண்கலவை நிரப்பிய 30X45 செ.மீ. என்ற அளவு பைகளில் நட்டு 3 மாதங்கள் வரை பராமரிக்க வேண்டும். நன்கு வளர்ச்சி அடைந்த பைகன்றுகளை தொட்டி அல்லது தரை குழிகளில் நடவு செய்யலாம். தொட்டிகளில் நடவு செய்யும் போது ஒவ்வொரு மண் தொட்டியிலும், அவைகளின் மேல் விட்டத்திற்கு ஏற்ப 3–5 வேர்பிடித்த கரணைகளை நடவு செய்யலாம்.

## அறுவடை

தொட்டி நடவு முறையில், தொட்டிகளின் விளிம்பு ஒரு அடி இருக்க வேண்டும். அதனுள் தாய் மண், மணல், தொழு உரம் நிரம்பிய மண் கலவையை நிரப்பி பைகன்றுகளை நடவு செய்ய வேண்டும். குன்றுகளை தொட்டியில் நட்ட பின் கன்றின் துரித வளர்ச்சிக்காக யூரியா 2 கிராம், சூப்பர் 3 கிராம், பொட்டாஷ் 1.25 கிராம் விதம் 2 மாதங்கள் கழித்து மண்ணில் இட்டு கிளறி விட வேண்டும்.

மாற்றாக இயற்கை உரமான தொழு உரம் 200 கிராம், கடலை புண்ணாக்கு 15 கிராம் அல்லது வேப்பம் புண்ணாக்கு 30–35 கிராம் விதம் இட்டு மண்ணை கிளறி குத்து செடிகளின் வளர்ச்சியை துரித படுத்தலாம். இலைப்புள்ளி நோய், இலைப்பேன் தாக்குதலை பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு பராமரிக்கப்படும் குத்து மிளகு செடியில் இருந்து ஒரு செடிக்கு ஒரு கிலோ விதம் அறுவடை செய்ய முடியும்.